(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 262/2022 அ.சா.4

Name : திரு. அந்தோணி ஜஸ்டின்

Father's name :

Village :

Taluk :

Caste :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 04.08.2025.

(**A**5 சிறையிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். மற்ற எதிரிகள் ஆஜர்)

முதல் விசாரணை:-

நான் மதுரை புது ராமநாதபுரம் ரோடு, கனித்தெருவில் வசித்து வருகிறேன். என் தகப்பனார் பெயர் ஞானபிரகாஷ். நான் துணியை சுமந்து சென்று வியாபாரம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த பார்வை மகசர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கு கீழே உள்ள கையெழுத்து என் அண்ணன் அந்தோணி பிரிட்டோவினுடையது. மேற்படி கையெழுத்தை எங்கு வைத்து போட்டேன் என்று கேட்டால் தெற்குவாசல் காவல்நிலையத்தில் வைத்து போட்டேன். போலீசார் கூப்பிட்டதால் காவல்நிலையம் சென்று கையெழுத்து போட்டேன். போலீசார் என் முன் பார்வை மகசர் தயார் செய்யவில்லை. வரைபடம் தயார் செய்யவில்லை. என்னிடம்

காட்டப்படும் கைப்பற்றுதல் அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கு கீழே உள்ள கையெழுத்து என் அண்ணன் அந்தோணி பிரிட்டோவினுடையது. மேற்படி கையெழுத்தை போலீசார் கேட்டுக்கொண்டதற்கு கிணங்க காவல்நிலையத்தில வைத்து கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். என் முன்னிலையில் போலீசார் பொருள் எதுவும் கைப்பற்றவில்லை.

**சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் கோரிக்கை விடப்பட்டு கோரிக்கை ஏற்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

என் அண்ணன் அந்தோணி ஸ்டீபன் பாத்திரக்கடை வைத்துள்ளார். என் அண்ணன் கடையில் கொலை நடந்தது என்று சொன்னால் அது தெரியாது. 03.05.2019 ம் தேதி மதியம் 3.30 மணியளவில் போலீசார் என் முன்னிலையிலும், என் அண்ணன் அந்தோணி பிரிட்டோ முன்னிலையிலும் அந்தோணி ஸ்டீபன் கடையை பார்வையிட்டு கொலை வழக்கு சம்பந்தமாக பார்வை மகசர், வரைபடம் தயாரித்தார்கள் என்றும், அந்த இடத்தில் சிமெண்ட் தரையில் இரந்த ரத்தம் பட்ட மற்றும் ரத்தம் படாத மண் மற்றும் பட்டா கத்தியை போலீசார் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார்கள் என்றும் சொன்னால் அது சரியல்ல. எதிரிகளுக்கு பயந்து கையெழுத்துக்களை மட்டும் ஒப்புக்கொண்டு இதர சங்கதிகளை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

Sd/- அந்தோணி ஜஸ்டின்

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/- G.Muthukumaran,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.